# கேள்வி:

## "நாமகரணக் கொள்கை கனவீனமானதென்றால் விசுவாசிகள் எப்படி ஒன்றாயிருக்க முடியும்?"

# பதில்:

*கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்கள் நூற்றுக் கணக்கான பிரிவுகளாகச் சிதறியுள்ளனர். எத்தனை வகையான பற்பசைகள் உண்டோ அத்தனை வகையாக இந்தப் பிரிவுகளும் காணப்படுகின்றன!*

*மார்க்கப் பிரிவினையால் போஷிக்கப்பட்டு, தீய எண்ணங்கள் மற்றும் விரோதங்களால் பிரிந்து நிற்பதால் நாமகரணக் கூட்டங்கள் யாவும் கிறிஸ்தவத்திற்கு கனவீனத் தைக் கொண்டு வருகின்றன என்று முதலாவதாக நாம் நம்புகின் றோம். இரண்டாவதாக, இவை யாவும், மற்ற மனிதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதைத் தடை செய்வதால் கனவீனப் படுத்துகின்றன. ஆப்பிரிக்கப் பழங்குடி இனத்தவர்களிடம் வித்தியாசப்பட்ட போதனைகளைப் போதிக்கும் மூன்று ஊழியக்காரர்கள் சென்றனர். சில மாதங்கள் ஆகியும் ஒருவர் கூட மனம் மாறவில்லை. அம்மூன்று ஊழியக்காரர்கள் அந்தப் பழங்குடி இனத்தவரின் தலைவரை அழைத்து என்ன தவறு என்று வினவினர். அவர்களின் குறைப்பாட்டைக் கேட்ட பிறகு, அம்மனிதர், "நீங்கள் இயேசுவைப் பற்றி எங்களுக்கு போதிக்கலாம், ஆனால் நீங்கள் யாவரும் வித்தியாசப்பட்ட போதனைகளைப் போதிக்கிறீர்கள். முதலில் நீங்கள் மூவரும் கலந்து பேசி இயேசு என்ன போதிக்கிறார் என்று முடிவு செய்யுங்கள். பிறகு ஒருவேளை நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று நாங்கள் கேட்போம்" என்றார். இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்பதாகச் சொல்பவர்களின் மத பிரிவினை களினால் பலர் கிறிஸ்துவைப் பின்பற்ற மறுக்கின்றனர்.*

“பிளவுபட்ட கிறிஸ்தவத்திற்காக நாம் அவிசுவாசமுள்ள உலகம் என்ற விலையைச் செலுத்தியுள்ளோம்” என்று யாரோ ஒருவர் கூறினார்.

நாமகரணக் கூட்டம் தேவனுடைய சித்தமல்ல என்பதே அது கிறிஸ்தவத்திற்கு கனவீனத்தை உண்டாக்குவதற்குக் காரணமாகும். இயேசு, “நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகி றேன். பிதாவே ... நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்” (யோவா. 17:20, 21) என்று ஜெபித்தார். பவுல், “சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத் தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனை யும், உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டு மென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத் தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்” (1 கொரி. 1:10) என்று எழுதினார்.

நாமகரணக் கூட்டங்கள் கனவீனம் உண்டாக்குபவைகள் என்று நாம் ஒப்புக்கொண்டாலும் கேள்வி இன்னும் அப்படியே உள்ளது: *கிறிஸ்துவை நம்புகிற யாவரும் எவ்விதம் ஒன்றா யிருக்க முடியும்?* ஒருமைப்பாட்டிற்கான இருவித அணுகு முறைகளை நாம் வேறுபடுத்திக் காட்டுவோம்.

## மனிதர்கள் பயன்படுத்தும் அணுகுமுறை

மனிதர்கள், ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கு பின்வரும் இரண்டு வழிகளில் ஒன்றைப் பயன்படுத்துகின்றனர். அவை களில் ஒரு வழி, *ஒற்றுமையின் மூலமாக ஒருமைப்பாட்டை* கொண்டுவருவது என்ற கருத்தின் மூலமாக முயற்சி செய்வ தாகும். வேறுபட்ட நாமகரணக் கூட்டங்களில், வித்தியாசப் பட்ட போதனைகளை பற்றிக்கொண்டிருக்கும் மனிதர்கள், ஒத்துப் போகாமலிருக்கச் சம்மதிக்கின்றனர். அவர்கள், தங்கள் யாவருக்கும் பொதுவாக உள்ள கருத்துகளை வலியுறுத்தி, மாறுபடுகின்ற கருத்துக்களைக் கண்டுகொள்ளாமல் விடுகின்றனர்.

சிலவேளைகளில் இவ்விதப் போக்குள்ள மக்கள் முறைசாரா ஜெபக்குழு மற்றும் வேத பாடக்குழுவாகக் கூடுகின்றனர். அவர்கள் தங்களுக்குள் மாறுபாடுள்ள கருத்துக் களை ஒதுக்கிவிட்டு, எல்லாரும் நம்புகின்ற கருத்துகளைப் பற்றி மட்டும் கலந்துரையாடுகின்றனர். அல்லது, அவர்கள் ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி, சபை அரசாங்கம் முதலியவற்றில் மாறுபட்ட கருத்துக்களையுடைய ஜனங்கள் யாவரும் கூடக்கூடிய ஒரு ஐக்கிய நாமகரண சபையை உண்டாக்குகின்றனர்.

சில பிரிவு சபைகளில் இதே விதமான அணுகுமுறையை இன்னும் சற்றுப் பெரிய அளவில் காணமுடியும். எல்லோரும் ஆர்வம் காட்டும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வேண்டி இந்த பிரிவுக் கூட்டங்கள் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து விடுகின்றனர். அல்லது நாமகரணக் கூட்டங்கள் சபைப் பிரிவுகளின் ஆலோசனைக் கூட்டங்களாகிவிடுகின்றன. இந்த ஆலோசனைக் கூட்டங்களில், ஒவ்வொரு பிரிவுக் கூட்டமும் தங்கள் சொந்த நம்பிக்கைகளைப் பற்றிக்கொண்டும், அதே வேளையில், சமூக செயல்பாடுகள், அல்லது உபகார விஷயங் கள், மற்றும் சுவிசேஷ அறிவிப்பு இவற்றில் ஒற்றுமையுடனும் செயல்படுகின்றனர்.

இந்த அணுகுமுறையில் தவறேதும் உள்ளதா? இது ஒரு குறிப்பிட்ட கோரிக்கையுடையதாய் இருக்கிறது; மற்ற நம்பிக்கைகளையுடைய எல்லா மக்களையும் சகித்துக் கொண்டு அவர்களுக்கு மதிப்பளித்து, மற்றவர்களுடன் நாம் ஒற்றுமையாக இருக்கின்றோம், இது கிறிஸ்தவ நடக்கைகளை வெளிப்படுத்துவது போலவும் உள்ளது.

பிரச்சனை என்னவென்றால், இந்தத் தீர்வானது உண்மையில் எதையும் தீர்த்து வைப்பதில்லை. இது உண்மை யான ஒருமைப்பாட்டை உண்டாக்குவதில்லை. இந்த அணுகு முறையைக் கையாளுவதென்பது குப்பையைக் கூட்டி வாசல் மிதியின் அடியில் சேர்த்து விடுவதைப் போன்றது. அது கண்ணுக்குத் தெரியாமல் இருப்பினும், இன்னும் அங்குதான் உள்ளது. நமது பிரிவினைகளானது ஒன்றுமில்லை என்று நாம் நடித்தபோதிலும், நாம் இன்னும் பிரிந்துதான் இருக்கிறோம், நாமகரணத்தின் தீமைகள் யாவும் இன்னும் இருந்து கொண்டு தான் உள்ளன.

மிகவும் முக்கியமானது என்னவென்றால், வேதாகமம்

விளக்குகின்ற வகையிலான ஒருமைப்பாட்டை இவ்வகையான அணுகு முறை உண்டாக்காது, எனவே இது தவறானதாகும். நமது கர்த்தர், விசுவாசிகள் யாவரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்பதற்காக "நான் உம்மிலேயும் நீர் என்னிலேயும் இருக்கிறது போல" (யோவா. 17:21) என்று ஜெபித்தார். பிதாவும் குமாரனும் எவ்வளவு நெருக்கமாயிருக்கின்றனர்? அவர்கள் நோக்கம், திட்டம் மற்றும் வல்லமை இவற்றில் எப்படி ஒன்றாயிருக்கிறார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். நாமகரணக் கூட்டங்கள் ஒற்றுமையாயிருந்து இவ்வித ஒருமைப்பாட்டை ஏற்படுத்துகின்றனரா? இல்லவே இல்லை! பவுல், கொரிந்தியரிடம், ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் ஒன்றாயிருக்க வேண்டும் என்று புத்தி சொல்லுகிறார் (1 கொரி. 1:10). ஆறு வித்தியாசப்பட்ட பிரிவுக் கூட்டங்கள் - வித்தியாசப்பட்ட பெயர்களையுடையவை களாய், இரட்சிப்புக்கு வித்தியாசப்பட்ட வழிமுறைகளை போதித்துக் கொண்டு, வித்தியாசப்பட்ட ஆராதனையைச் செய்துகொண்டு - ஒற்றுமையாய் இருக்கலாம் என்று சம்மதித் தால், அவர்கள் உண்மையில் சம்மதிக்கிறார்களா? அவர்கள் ஏக யோசனையும், ஏக மனதும் உள்ளவர்களாயிருக்கிறார்களா? இல்லை, அவர்கள் அவ்வாறு இருப்பதில்லை!

வேதாகமத்தின்படியான ஒருமைப்பாடு உண்மையான ஒருமைப்பாடு ஆகும். அது உபதேசம் மற்றும் நடைமுறையில் உள்ள ஒருமைப்பாடு ஆகும். ஒற்றுமையானது இவ்வகையான ஒருமைப்பாட்டைக் கொண்டுவரும் என்று நாம் எவ்வளவு தூரம் கற்பனை செய்தாலும் அது நிறைவேற முடியாத ஒன்றாகும்.

மதப் பிரிவினைகளை வெற்றி கொள்ள மனிதர்கள் பயன்படுத்தும் இரண்டாவது வழி, சபைக்கூட்டங்களை இரண்டறக் கலப்பதாகும். ஒத்துப் போவதின் மூலமாக ஒருமைப்பாட்டைக் கொண்டுவருதல் என்று இது எண்ணப் படலாம், ஏனென்றால் இந்த ஒருமைப்பாட்டில் ஈடுபடும் பிரிவுக் கூட்டங்கள் ஐக்கிய சபையானது என்ன விதமாக வடிவமைக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் ஒத்துப் போக வேண்டும்.

இந்த அணுகுமுறையில் தவறேதும் உள்ளதா? "ஒற்றுமை யின் மூலம் ஒருமைப்பாடு" என்ற கருத்துக்கெதிராக எழுந்த புகாருக்கு இது பதில் அளிப்பது போலிருக்கலாம், ஆனால் இது

உண்மையான ஒருமைப்பாட்டை விளைவிப்பதில்லை. இவ்வாறு புதிதாய் உண்டான சபைக்கூட்டமானது ஒருமைப் பாடுள்ளதாய் இருக்கிறது. என்றாலும் இந்த அணுகுமுறைக்கு இருவித மறுப்புகள் தெரிவிக்கப்படலாம்.

ஒன்று, ஒத்துப்போவதன் மூலம் ஒருமைப்பாடு என்பது அதிகமான ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில்லை, அவைகள் சபைப்பிரிவினைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதில்லை. கானடாவில், மூன்று சபைகள் ஒன்று கூடி "ஐக்கிய சபை" ஒன்றை உண்டாக்கின. இது நாங்கள் 1960களின் முற்பகுதியில் கானடாவில் வசித்தபோது நடந்தது. ஐக்கிய சபையானது அநேகமாக, பெரிய புரொட்டஸ்டன்டு நாமகரணக் கூட்டமாயிருந்தது. இந்த ஐக்கிய சபையில் இணைந்த மூன்று பிரிவு சபைகளும் தனித்தனியே இயங்கி வந்தன. இணைப்பு உருவானபோது, அதில் கருத்து வேறுபாடு கொண்ட சபையாரும், தனிநபர்களும் ஐக்கிய சபைக்குப் புறம்பே இருப்பதென்றும், அவர்கள் தாங்கள் முன்பிருந்த நாமகரணக் கூட்டத்திலேயே இருப்பதென்றும் முடிவு செய்தனர். மூன்றிற்குப் பதில் ஒன்றாக இருக்கச் செய்வதே இந்த இணைப்பின் நோக்கமாயிருக்க வேண்டும் என்று நான் கருது கிறேன். ஆனால், இதன் விளைவு என்னவாயிற்று என்றால், மூன்றிற்குப் பதில் நான்கு கூட்டங்கள் உருவாகி விட்டன. அதாவது இருந்த மூன்று சபைப் பிரிவுகளுடன், இப்போது ஐக்கிய சபை என்ற இன்னொரு பிரிவும் உண்டாகி விட்டது. இணைப்புகள் என்பது இன்னும் அதிக பிரிவினையை உண்டாக்கிவிட்டது.

ஒருமைப்பாட்டுக்கான இவ்வித வழிக்குள்ள வேறொரு மறுப்பு பின்வருமாறு: "ஒரு பெரிய சபை" என்ற அடிப் படையில் நாமகரணக் கூட்டங்கள் ஒன்றிணையும்போது, அந்த "ஒரு பெரிய சபை" தேவனைப் பிரியப்படுத்தும் என்பதற்கான உறுதிப்பாடு எதுவும் கிடையாது. ஒத்துப் போவது என்பது எப்பொழுதும் மனிதர்களின் கருத்துக்கள் மற்றும் பாரம்பரியங்களின் அடிப்படையிலேயே நடந்து வருகின்றது. உதாரணமாக, ஒரு நாமகரணக் கூட்டத்தைச் சேர்ந்தவர், "நீங்கள் எங்கள் ஆராதனை முறைமையை ஏற்றுக்கொண்டால், நாங்கள் உங்கள் சபையின் நிர்வாக முறைமையை ஏற்றுக் கொள்கிறோம்" என்று சொல்லுவார். சத்தியத்தை அடைவதற்கு ஒத்துப் போவதென்பது சிறந்த

வழியல்ல. சத்தியம், ஒருமைப்பாட்டிலும் முக்கியமானது. இயேசு, "சத்தியத்தையறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலை யாக்கும்" (யோவா. 8:32) என்றார். தவறானவைகளை நம்பி, அவைகளை நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தால், அது ஐக்கியம் என்று பெயர் பெற்றிருந்தாலும் தேவனைப் பிரியப்படுத்துவதாகாது.

நாம் எண்ணுகின்றவைகளின் அடிப்படையில் ஒத்துப் போய், ஒன்றாகுவோமென்றால், ஒருவேளை "ஒரு பெரிய சபையாக" க் கூட நாம் ஒன்றிணையக் கூடும். ஆனால் அந்த "ஒரு பெரிய சபை" தேவனைப் பிரியப்படுத்தவில்லையென் றால், நாம் பெற்ற இலாபம் என்ன? இடைக்காலங்களில், கிறிஸ்தவத்தில் அநேகமாக "ஒரு பெரிய சபை" என்ற அளவில் தான் இருந்தது. அது ஒருமைப்பாடு ஆகும். ஆனால் "ஒரு பெரிய சபை" தேவனைப் பிரியப்படுத்தியதா? நம்மில் சிலரே இதற்கு ஆம் என்று சம்மதிக்கக் கூடும்.

ஆதலால், சபை இணைப்புக்கள் என்பது பிரிவினைப் பிரச்சனைகளைத் தீர்க்கும் முறையல்ல, இதன்மூலம், ஒரே சபை ஏற்பட்டாலும், அந்த ஒரே சபை வேதாகமத்தின்படியான ஆராதனையைப் போதிக்காவிட்டால், அதில் இணைந்தவர் களுக்கு எந்த நன்மையும் கிடையாது. ஒருமைப்பாட்டைத் தேடுகின்ற வேளையில், *முதலாவது* சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து தேவனைப் பிரியப்படுத்துவதையும், *இரண்டாவது*, நாம் ஒன்றாக இருப்பது பற்றியும் அக்கறையாயிருக்க வேண்டியது அவசியமாகும்.

ஒருமைப்பாட்டை அடைய மனிதர்கள் கூறிய முதலாம் வழி முறையானது, ''குடை வழிமுறை'' என்று எண்ணப் படலாம். எல்லா நாமகரணக் கூட்டங்களையும் அல்லது எல்லா ''கிறிஸ்தவர்களையும்'' ஒரே ''குடையின்'' கீழ் கொண்டு வருவது அல்லது ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வருவது அதன் பிறகு, எல்லாம் ஒன்றாகிவிடும் என்பது இதன் கருத்தாகும். ஆனால் இவ்விதத்தில் அது செயல்படுவதில்லை.

ஒருமைப்பாட்டை அடைய மனிதர்கள் கூறிய இரண்டாம் வழிமுறையானது, ''கலவை வழிமுறை'' என்று எண்ணப் படலாம். இது அநேக திரவங்களை ஒன்றாக ஊற்றி ஒரு புதிய பொருளை உண்டாக்குவதைப் போன்றதாகும். விளை பொருள் ஒன்றாயிருப்பினும் அது சரியான கலவையாயிராது. அநேக மருந்துகளை ஒன்றாகக் கலந்துவிட்டாலும், நமக்குத்

தேவையான மருந்து கிடைக்காததுபோல, அநேக நாமகரணக் கூட்டங்களின் உபதேசங்களைக் கலந்துவிட்டாலும், அது தேவனைப் பிரியப்படுத்த உதவுவதில்லை.

## வேதாதமத்தின்படியான அணுகுமுறை

இரண்டாவதாக, ஐக்கியத்திற்கான மனிதர்களின் அணுகுமுறையிலிருந்து, வேதாகமத்தின்படியான அணுகுமுறை மாறுபடுவதைக் காணுவோம். வேதாகமத்தின்படியான அணுகு முறையில் ஐக்கியத்தின் ஐந்து பண்புகளை நாம் வரிசைப்படுத்த முடியும்.

*வேதாகமத்தின்படியான ஐக்கியம் தேவனுடைய வார்த்தை களின் அடிப்படையில் உள்ளது.* ஐக்கியத்திற்காக இயேசு செய்த ஜெபத்தின் உட்பொருளில் அவர் வார்த்தைக்கு உள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்துவது தெளிவு. அப்போஸ்தலர் களுக்கு வசனம் கொடுக்கப்பட்டதாகவும் (யோவா. 17:6, 14), அவர்கள் வசனத்தைக் கைக்கொண்டதாகவும் (யோவா. 17:6) அவர்கள் வசனத்தினாலே பரிசுத்தமாக்கப்படுவார்கள், வசனமே சத்தியம் என்றும் (யோவா. 17:17, 19), அப்போஸ்தல ருடைய வார்த்தையினாலே உலகம் இயேசுவை விசுவாசிக்கும் என்றும் (யோவா. 17:20) இயேசு கூறினார். தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படுதல், அதற்குக் கீழ்ப்படிதல் என்ற உட்பொருளில் மட்டுமே இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் ஒன்றாயிருக்க முடியும் என்று கூறியுள்ளது தெளிவாகிறது.

நாம் எல்லாரும் ஒன்றாயிருக்க தேவனுடைய வசனத்துக்கு நாம் ஏன் கீழ்ப்படிய வேண்டும்?

ஒரே அதிகாரத்தை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளாத வரை நமக்குள் ஐக்கியம் இருக்க முடியாது என்பதால் இது அவசியமாகிறது. மதத்தின் நிறைவான அதிகாரம் எங்குள்ளது? சபைப் பாரம்பரியத்திலா? வேதாகமத்திலா? வேதாகமத்தின் படி பார்க்கும்போது, வேதாகமம் மாத்திரமே மதத்தில் நமக்கு அதிகாரமுள்ள வழிகாட்டியாக உள்ளது. இது மட்டுமே தேவ ஆவியினால் அருளப்பட்டு, எந்த நற்கிரியையும் செய்ய நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறது. (2 தீமோ. 3:16, 17). இது ''சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை'' கொண்டுள்ளது (யாக். 1:25) மற்றும் "பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தையும்" கொண்டுள்

ளது (யூதா. 3). சத்தியத்திற்குக் கீழ்ப்படியும்போது தேவனுடைய வசனத்தினால் நாம் மறுபடியும் பிறக்கிறோம் (1 பேது. 1:22), அதனால் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் என்று தேவனுடைய வசனம் கூறுகின்றது (யோவா. 12:48). வேதாகமமே மதத்தில் அதிகாரமுடையதாகும். இதை நாம் ஒப்புக் கொள்ளாதவரை, நாம் எப்பொழுதும் ஒன்றாயிருக்க முடியாது.

வேதாகமத்தின்படியான ஐக்கியம் கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியம் ஆகும். யோவான் 17:21ல் இயேசு, ''அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், ... நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்'' என்றார். நாம் ஒருவர் ஒருவருடன் கொண்டுள்ள ஐக்கியமானது தேவனும், கிறிஸ்துவும் கொண்டுள்ள ஐக்கியம் போன்றதாகும். 1 யோவான் 1:7ல் யோவான் இதைத் தெளிவாக்குகிறார்: "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்." ஐக்கியத்தின் நோக்கம், நாம் ஒருவர் ஒருவருடன் ஒன்றாயிருக்க வேண்டும் அல்லது "ஒருவரொருவருடன் ஐக்கியமாய் இருக்க வேண்டும்" என்பதுதான். இது, எப்படி, எப்பொழுது பெறப்படக் கூடும்? "ஒளியில் நடப்பதன்'' மூலமே இதை நாம் பெற முடியும், மற்றும் நம் பாவங்கள் மன்னிக்கப்படும்போதுதான் இதைப் பெறுகின்றோம். யோவான், தேவனுடனான நமது மேல் நோக்கிய உறவு சரியானதாக இருக்குமென்றால், நாம் ஒருவரொருவருடன் ஐக்கியப்பட்டிருப்போம், எல்லாரும் ஒன்றாயிருப்போம் என்று கூறுகிறார்.

வேறுவார்த்தைகளில் சொல்வதானால், நாம் அனைவரும் கிறிஸ்துவில் இணைந்திருக்கும்போது ஒருவரொருவருடன் ஐக்கியப்பட்டிருப்போம். சக்கரத்தின் ஆரக்கால்கள் யாவும் அதன் மைய அச்சோடு சரியாக இணைக்கப்பட்டிருந்தால், அவைகள் யாவும் ஒன்றுக்கொன்று சரியான தொடர்புள்ளதாய் இருக்கும். அதே போன்று, நமக்குள் விசுவாசத்தை ஏற்படுத்தினவராகிய இயேசுவுக்குள் நாம் சரியான அங்கங்களாய் இருந்தால், நாம் ஒருவரொருவருடன் சரியான உறவுள்ளவர்களாய் இருப்போம்.

வேதாகமத்தின்படியான ஐக்கியம் சபையின் ஒரு பாகமாகும். கிறிஸ்துவுக்குள் மட்டுமே ஐக்கியம் உள்ளதென்றால், அவரது சபைக்குள் மட்டுமே ஐக்கியம் உள்ளதென்பதில் நாம் வியப்படையக் கூடாது, ஏனெனில் சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது, ''எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிறைவாக்குகிறவருடைய'' சரீரமாய் உள்ளது (எபே. 1:23). சபை கிறிஸ்துவின் நிறைவாயிருக்குமென்றால், நாம் சபைக்குள் இல்லாமல், கிறிஸ்துவுக்குள் இருக்க முடியாது. இப்படியாக நாம், ஒன்றாயிருக்க வேண்டுமென்றால், நாம் கிறிஸ்துவுக்குள்ளும் அவரது சரீரமாகிய சபைக்குள்ளும் இருக்க வேண்டும்.

சபை ஒன்றே. ஒரே ஒரு சபையைக் கட்டுவதாக இயேசு வாக்குக் கொடுத்தார் (மத். 16:18). ஆதலால், ஒரே ஒரு சபை மாத்திரம் இருக்கிறது (எபே. 4:4). தேவன், யூதர்கள் மற்றும் கிரேக்கர்கள் ஆகிய இரு திறத்தாரையும் "ஒரே சரீரமாக, சிலுவையின் மூலமாக தேவனுக்கு" ஒப்புரவாக்கினார் (எபே. 2:16), அதன் விளைவாக இன்று ஒரே ஒரு சபை மாத்திரம் இருக்கிறது - ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் (யோவா. 10:16). இந்த சபையிலிருக்கிறவர்கள், சரீரத்தின் அங்கமாய், அல்லது அவயவமாய் இருக்கிறார்கள், ''அவயவங்கள் அநேகமாயிருந்தும்,'' "சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது" (1 கொரி. 12:12). இயேசுவைப் பின்பற்றுவோர் கண்டறிய வேண்டும் என்று அவர் விரும்பும் ஒருமைப்பாடு, இயேசு கிறிஸ்துவின் இந்த ஒரே சபையிலுள்ள ஒருமைப்பாடாயிருக்கிறது.

இவ்வாறாக, ஐக்கியம் என்பது சபைக்குப் புறம்பே காணக் கூடியதல்ல. நாமகரணக் கூட்டங்களிலும் இதனைக் காண முடியாது. வித்தியாசப்பட்ட பல சபைப்பிரிவுகள் இணைந்திருந்தால் அது ஐக்கியமாகாது. புதிய ஏற்பாட்டின் சபையில் ஒரு அங்கமாகும்போது, விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகிறார்கள்.

வேதாகமத்தின்படியான ஐக்கியம் இன்றியமையாத ஐக்கியம் ஆகும். புதிய ஏற்பாடு, நாம் அனைவரும் "ஒரே சிந்தை"யுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று போதிக்கிறது. இருப்பினும் வேதாகமத்தின் எல்லைகளுக்குள்ளேயே, கிறிஸ்தவத்தில், வழிமுறைகளில் வித்தியாசப்பட்ட கருத்துக்கள் உண்டு.

முதலாம் நூற்றாண்டின் சபைகள் உபதேசத்தில் ஒரு மனப்பட்டிருந்தனர். இருப்பினும் வழி முறைகளில் வேறு

பாடுகள் சில இருந்தன. எடுத்துக்காட்டாக, அவர்களெல் லாரும் கர்த்தருடைய நாளில் ஆராதிக்கக் கூடினார்கள், ஆனால் எல்லா சபைகளும் ஒரே நேரத்தில் கூடி ஆராதிக்கவில்லை. மேலும், கர்த்தருடைய ஊழியத்தை சிறப்புறச் செய்வதற்கு பலவித வழிமுறைகளை அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம்.

இவைகளுடன், சூழ்நிலைகளுக்குத் தக்காற்போன்று, விக்கிரங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கலாமா? என்பது போன்ற வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியிருந் தது. எனவே ஒரு சபையிலிருந்த கிறிஸ்தவர்கள் அதை உண்டிருக்கலாம்; வேறொரு சபையிலிருந்த கிறிஸ்தவர்கள் அதை உண்ணாமலிருந்திருக்கலாம்.

காலங்களினூடே, கிறிஸ்தவர்களுக்குள் சில வேறுபாடுகள் இருந்துள்ளது - கர்த்தருடைய ஊழியத்தை "எப்படி" ச் செய்வது என்பதில் வேறுபாடுகள், முன்னுரிமை மற்றும் செயல்முறை இவற்றில் வேறுபாடுகள், வேதாகமம் தெளிவாகப் பேசாதவை களைக் குறித்து முரண்பாடான கேள்விகள் ஆகியவை இருந்து வருகின்றன. இவ்வித மாறுபாடுகளின்போது கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் முழுமையான சீரமைவு இல்லாமலிருப்பினும், ஐக்கியம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அபிப்பிராயங்களை நாமே கூற அனுமதிக்கும் விஷயங்களில், மற்றவர்கள் நம்முடன் மாறுபடுவதை நாம் அனு மதிப்பது அவசியமாகிறது.

இருப்பினும், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களிடம் விசுவாச விஷயங்களில் ஐக்கியம் காணப்பட்டது. கிறிஸ்தவர் கள், அபிப்பிராயங்களை நாமே கூற அனுமதிக்கும் விஷயங் களில் வேறுபடலாம், ஆனால் கிறிஸ்தவத்தின் முக்கிய கூறுகளில் எல்லோரும் உடன்பட்டுள்ளனர்; ஒருவர் கிறிஸ்த வராக என்ன செய்ய வேண்டும்? கர்த்தருடைய சபை ஆராதனை மற்றும் ஊழியம் என்பதென்ன? கிறிஸ்தவ வாழ்க்கை வாழ நாம் என்ன செய்ய வேண்டும்? போன்றவைகளில் எல்லாரும் ஒருமித்த கருத்துடன் இருந்தனர்.

வேதாகமத்தின்படியான ஐக்கியமானது, சரியான சிந்தனைகளால் பாரமரிக்கப்படுகிற ஒரு ஐக்கியமாகும். கிறிஸ்துவுக்கு நமது கீழ்ப்படிதல் மூலம் அவருடன் ஐக்கியமாகி, அவரது சபையில் அங்கமான பிறகு, இன்னும் செய்ய வேண்டியதொன்றுள்ளது. நமது ஐக்கியத்தைச் சரியான

*சிந்தனைகளால் பராமரிக்க வேண்டும்.*

*வேதாகமத்தின்படியான ஐக்கியம் சில வேளைகளில் மறைந்து போகக் கூடும். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், விசுவாசிகள் ஒன்றாக இருந்தனர். அவர்கள் ஒன்றையே விசவாசித்து, ஒன்றையே போதித்து, ஒரே சபையில் இருந்தனர். இருப்பினும் பிரிவினைகளைத் தவிர்த்து ஐக்கியத்தைப் பாதுகாக்கும்படி அவர்களுக்கு புத்தி சொல்லுவது அவசிய மாயிற்று. ஏன்? கலகத்தினால் அவர்களின் உண்மையான ஐக்கியம், மறைந்து போகக் கூடிய அபாயம் இருந்தது.*

*பவுல் எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர் களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைப் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்று அறிவுரை கூறினார் (எபே. 4:2, 3). அவர் பிலிப்பியர்களை, "நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்பும் உள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்" (பிலி. 2:2) என்று கேட்டுக் கொண்டார். அவர் கொலோசெயர்களை, "இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்" (கொலோ. 3:14) என்று அறிவுறுத்தினார். நமக்கும் இந்தச் செய்தி தேவை.*

*கிறிஸ்துவின் சபைகளில் உள்ள யாவரும் அங்கத்துவத்தில் ஒன்றாகவே உள்ளனர். மேலே நாம் பார்த்த வசனங்கள், நாம் ஒன்றாக இருந்தால் நமது செயல்பாடும் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்று கூறுகின்றன. தேவனுடைய வசனத்தின்படி ஒன்றாயிருப்பது மிகவும் முக்கியமானதாகும். அதே வேளை யில் அக்கறை, இரக்கம், சாந்தம் - தாழ்மை, சற்குணம், பொறுமை, சகிப்புத்தன்மை, மன்னித்தல், அன்பு, சுய நலமின்மை, தாழ்மை மற்றும் இவையனைத்தும் அடங்கிய கிறிஸ்துவின் சிந்தையை கிறிஸ்தவர்களிடம் ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, அன்புக்காக நாம் பிரயாசப்பட வேண்டும் ஏனென்றால் அன்பு "எல்லாவற்றையும் பூரண சற்குணத்தினால் கட்டுகிறது" (கொலோ. 3:14).*

# முடிவுரை

வேதாகமத்தின்படியான ஐக்கியம், வேறுபட்ட சரீரங் களுக்குள் உள்ள வெறும் ஒற்றுமையோ அல்லது மனிதனின் கருத்துக்களால் விளைந்த ஒத்துப்போகுதலோ அல்ல.

மாறாக, வேதாகமத்தின் ஐக்கியமானது, (1) தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலானது ... (2) கிறிஸ்துவில் காணப் படுவது ... (3) சபையின் ஒரு பகுதியானது ... (4) மற்றும் இன்றியமையாதவைகளின் ஐக்கியமாகும் ... (5) சரியான நடக்கைகளினால் பராமரிக்கப்படுகிறது.

ஐக்கியத்திற்கு நீங்கள் என்ன பங்களிக்க முடியும்? அதை எத்திசையிலிருந்து நோக்கினாலும், விசுவாசித்து, உங்கள் பாவ மன்னிப்புக்கென்று கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதினால் கீழ்ப்படிந்து கிறிஸ்தவராவது மிகவும் அவசியம்.

கிறிஸ்துவின் அதிகாரத்தையும், அவருடைய வசனத்தையும் ஏற்றுக்கொள்ள நீங்கள் ஞானஸ்நானம் பெறுவது அவசியம் (மத். 28:18-20).

இயேசுவை விசுவாசிக்கின்றபோது, கிறிஸ்துவுக்குள்ளாக நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியம் (கலா. 3:26-28).

கிறிஸ்தவர்கள் அனைவரும் ஐக்கியமாயிருக்கும் ஒரே சபையில் அங்கம் வகிக்க நீங்கள் ஞானஸ்நானம் பெறுவது அவசியம் (1 கொரி. 12:13).

ஞானஸ்நானம் என்பது கிறிஸ்தவத்தின் இன்றியமை யாதவைகளில் ஒன்றாக உள்ளதால் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றாக அது உள்ளது. ஞானஸ்நானம் கிறிஸ்துவால் அவசியமானதாக கேட்கப்படுகிறது (மாற். 16:15, 16) அது பாவமன்னிப்புக்கு அவசியமானதாகும் (அப். 2:38). எபேசியர் 4ல் கூறப்படுகிற ஏழு "ஒன்று" களில் இதுவும் ஒன்று ஆகும்.

கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவமன்னிப்புக்கென்று நீங்கள் ஞானஸ்நானம் பெறும்போது நீங்கள் கிறிஸ்துவோடும், அவரைப் பின்பற்றுகிறவர்களோடும் ஐக்கியமாகின்றீர்கள். இதுவே கிறிஸ்தவ ஐக்கியத்தை வளர்ப்பதற்கு நீங்கள் எடுத்து வைக்கும் முதல் அடிவைப்பு ஆகும். பிறகு சபையில் உங்கள் சகோதர சகோதரிகளிடம் அன்பு காட்டுவதன் மூலம் இந்த ஐக்கியத்தைக் காக்க முடியும். மேலும் மற்றவர்களை

கிறிஸ்துவின் ஐக்கியமாகிய சபைக்குள்ளாகப் பிரவேசிக்கும்படி நீங்கள் உற்சாகப்படுத்த முடியும்.

"ஒன்றாயிருந்தால் எழுந்து நிற்கிறோம்; பிரிந்து போனால் விழுந்து போகிறோம்" என்று ஒருவர் கூறினார். ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை உணரவேண்டிய வேளை இது! மேலும் வேதாகமத்தின்படியான ஐக்கியத்தை தேட ஆரம்பிக்க வேண்டிய வேளை இது! வேதாகமத்தின்படியாக ஐக்கியப் பட்டிருந்தால் நாம் எழுந்து நிற்போம்! இல்லையேல், பிரிந்து நின்றால் விழுந்து விடுவோம்.